**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 134/2019 |
| Name | : | Parthiban |
| P.W. | : | 8 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.12.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிறப்பு நுண்ணறிவு பிரிவு உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.09.2014ம் தேதி நான் மடத்துக்குளம் காவல் வட்ட ஆய்வாளராக பணியில் இருந்த போது தலைமை காவலர் கோகுலகிருஷ்ணன் என்பவர் மடத்துக்குளம் காவல் நிலைய குற்ற எண்.211/2014 இதச பிரிவுகள் 279, 304(A) ன் படி பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை மற்றும் வழக்குக் கோப்பை பெற்று நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 12.04.2014ம் தேதி காவை 10.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்லமுத்து மற்றும் ரஞ்சித் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **புகார் மனு அ.சா.ஆ.3 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் இறந்து போன பெரிய தண்டபாணி என்பவரின் பிரேதத்தின் மீது உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் வைத்து சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இவ்வழக்கில் இறந்து போன பெரியதண்டபாணி

என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனை மருத்துவர் சிவபிரபு அவர்களிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அவரை விசாரணை செய்து இறந்து போன பெரியதண்டபாணி பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். பின்னர் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 20 AK 0349 Ashok Ley land லாரியை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்த வேண்டி உடுமலைப்பேட்டை மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்வாளர் முருகானந்தம் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இவ்வழக்கின் எதிரியை கைது செய்து 12.09.2014 ம் தேதி நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் புலன் விசாரணை முடித்து எதிரி மீது கடந்த 20.09.2014 ம் தேதி இதச பிரிவுகள் 279, 304(A) ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.12.30 17:38:39 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்